## ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டமானது 18.05.2022 (புதன் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

நாள்.13.05.2022

### 11.04.2022-ஆம் நாள் நகர்மன்றகூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள் எண்.6

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அனைத்து பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட மற்றும் விரிவாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ஆழியார் அணையினை நீர் ஆதாரமாக கொண்டு இந்நகராட்சிக்கு புதிய கூட்டு குடிநீர் திட்டம் அரசாணை (நிலை) எண்.44, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.05.2020-இன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நகராட்சியின் மக்கள் தொகை 37413 (2024 வருடம்), 45892 (2039 வருடம்) மற்றும் 54172 (2054 வருடம்) என கணக்கிடப்பட்டு தினசரி வந்து செல்வோரின் எண்ணிக்கையும், கணக்கில் கொண்டு இந்நகராட்சிக்கான இடைக்கால ஆண்டு (2039 வருடம்) குடிநீர் தேவை 5.35 எம்.எல்.டி எனவும், உட்சபட்ச ஆண்டு (2054 வருடம்) குடிநீர் தேவை 6.44 எம்.எல்.டி எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, நகரில் புதிதாக 7.98 கி.மீ நீளம் புதிய, நீருந்து குழாய்கள் அமைத்து மேல் நிலைத்தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யவும், மேலும் 3 புதிய மேல் நிலைத் தொட்டிகள் காந்தி நகர் பகுதியில் 4.30 இலட்சம் லிட்டர், ஏ.பி.பி நகர் பகுதியில் 5.30 இலட்சம் லிட்டர் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகப் பகுதியில் 7.60 இலட்சம் லிட்டர் அமைக்கப்பட்டு, மேல் நிலைத் தொட்டியிலிருந்து நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 92.17 கி.மீ நீளம் பகிர்மான குழாய்கள் அமைத்து, இதன் மூலம் வீட்டுகுழாய்கள் 8617 எண்ணம் வழங்க கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப்பணிகளுக்கான உட்கட்டமைப்பு செலவின மதிப்பீடு 27.95 கோடி ஆகும். இந்நகராட்சிக்கான திட்ட விகிதாச்சார மதிப்பீட்டு தொகை ரூ.134.86 கோடி ஆகும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் நிலையில், நகராட்சி பொதுமக்களுக்கு தனிநபர் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய இயலும். மேலும் இத்திட்டம் செயல்படுத்துதல், குடிநீர் மராமத்து பணிகள், ஊதியம் மற்றும் மின் கட்டணம் முதலானவைகள் வருவாய் இனங்களைவிட கூடுதல் செலவினமாக உள்ளதாலும், காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் பெறப்படும் குடிநீர் மற்றும் இத்திட்டத்தின் மூலம் பெறப்படும் குடிநீர்க்கான கட்டணம் 1000 லிட்டர் 10.94 வீதம் செலுத்தும் கட்டணங்கள் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுவதாலும், இந்நகராட்சி மூலம் வழங்கப்படும் புதிய குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர குழாய் கட்டணம் வீட்டு உபயோகம் காரியமாக மற்றும் பிற உபயோகம் காரியங்களுக்கான

கட்டணங்கள் பேரூராட்சி நிலையில், துணை விதிகள் உருவாக்கப்பட்டு 2009-2010-ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளது. எனவே மேற்படி கட்டண விகிதாச்சார செலவினங்களை ஈடு செய்யும் வகையில், திருத்தியமைக்கும் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

<u>புதிய இணைப்பிற்கான வைப்புத் தொகை மற்றும் திருத்திய மாதாந்திர கட்டண விவரம்</u>

| **குடியிருப்பு உபயோகம் – மாதாந்திர கட்டணம்** | | | | | |
|---|---|---|---|---|---|
| **உபயோகம்** | தற்போதைய மாதாந்திர கட்டணம் ரூ | **கட்டிடத்தின் சதுர.அடி** | | | |
| | | **<=600** | **601-1200** | **1201-1800** | **>=1801** |
| | | **வகைபாடு-4** | **வகைபாடு-3** | **வகைபாடு-2** | **வகைபாடு-1** |
| **குடியிருப்பு** | 100 | 200 | 300 | 400 | 500 |
| **வணிக உபயோகம் – மாதாந்திர கட்டணம்** | | | | | |
| **உபயோகம்** | தற்போதைய மாதாந்திர கட்டணம் ரூ | **கட்டிடத்தின் சதுர.அடி** | | | |
| | | **<=600** | **601-1200** | **1201-1800** | **>=1801** |
| | | **வகைபாடு-4** | **வகைபாடு-3** | **வகைபாடு-2** | **வகைபாடு-1** |
| **வணிகம்** | 250 | 500 | 750 | 1000 | 1250 |
| **குடியிருப்பு உபயோகம் – வைப்புத் தொகை** | | | | | |
| **உபயோகம்** | தற்போதைய வைப்புத் தொகை ரூ | **கட்டிடத்தின் சதுர.அடி** | | | |
| | | **<=600** | **601-1200** | **1201-1800** | **>=1801** |
| | | **வகைபாடு-4** | **வகைபாடு-3** | **வகைபாடு-2** | **வகைபாடு-1** |
| **குடியிருப்பு** | 6000 | 8000 | 10000 | 12000 | 15000 |
| **வணிக உபயோகம் – வைப்புத் தொகை** | | | | | |
| **உபயோகம்** | தற்போதைய வைப்புத் தொகை ரூ | **கட்டிடத்தின் சதுர.அடி** | | | |
| | | **<=600** | **601-1200** | **1201-1800** | **>=1801** |
| | | **வகைபாடு-4** | **வகைபாடு-3** | **வகைபாடு-2** | **வகைபாடு-1** |
| **வணிகம்** | 8000 | 10000 | 15000 | 20000 | 25000 |

மேற்கண்டுள்ள பட்டியலில் உள்ளவாறு, குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான திருத்திய வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர குடிநீர்க் கட்டணங்களை நான்கு வகைபாடுகளாக பிரித்து திருத்திய குடிநீர்க் கட்டணம் மற்றும் வைப்புத் தொகைகளை நிர்ணயம் செய்திடவும், மேற்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ள குடிநீர் கட்டண விவரங்களை தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு விளம்பரம் செய்து, இது தொடர்பான ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைள் ஏதும் இருப்பின் அவற்றை பொதுமக்களிடமிருந்து பெற்று முடிவு செய்து, அதன் பின்னர் திருத்திய வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர குடிநீர் கட்டணத்தை இறுதி செய்து, துணை விதிகளை ஏற்படுத்தி அதற்கான அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு செயல்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 130, 131(1), (2), (3), 132(1), 132(எ), 134, 135, 306(3), (சி), (டி), (இ), (எப்), (ஜி), (எச்), (ஐ), 308 மற்றும் 309 ஆம் பிரிவின்படி, குடிநீர் திட்டத்திலிருந்து வீட்டு உபயோக காரியங்களுக்கு மற்றும் வீட்டு உபயோகம் அல்லாத மற்ற காரியங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதலுக்கான வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணங்கள் துணை விதிகளின்படி, 2009-10 ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டதை, குடிநீர் இணைப்புகளுக்கு வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணங்கள், தற்போதைய நிலையில் ஏற்படும் செலவின நிதி இழப்பை ஈடு செய்யும் வகையில், திருத்திய வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர குடிநீர்க் கட்டணங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் கோரி தினசரி நாளிதழ்களில் விளம்பர வெளியீடு செய்திடவும், இறுதி செய்யப்பட்ட திருத்திய வைப்புத் தொகைகள் மற்றும் குடிநீர்க் கட்டணங்களுக்காக ஏற்படுத்தப்படும் துணைவிதிகளுக்கான அறிவிக்கையினை மாவட்ட

அரசிதழில் வெளியிடுவதற்கும் ஆகும் செலவினங்களை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.( ந.க.எண்.1019/2022/இ1)

**தீர்மான எண். 25**

ஒத்தி வைக்கப்பட்டது.

**பொருள்** : 1

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2021-2022-ஆம் ஆண்டு வியாழக்கிழமை கூடும் வாரச்சந்தை ஆடு, கோழி மற்றும் தோல் சுங்க வசூல் செய்யும் உரிமை குத்தகைதாரர் திரு.பி.சுரேஷ் என்பவரால், கொரோனா ஊரடங்கு காலத்திற்கு குத்தகை தொகை தள்ளுபடி அல்லது கால நீட்டிப்பு கோரி, இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு W.P.(MD) No.4205/2022-இன்படி, தொடர்ந்த வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.லூர்து பவுல் மவுரியா வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை எதிர்கொண்டு தீர்புரை பெற்று தந்தமைக்கான கட்டணம் தொகை ரூ.15,000/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் , மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1691/2021/இ1)

**தீர்மான எண். 27**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்** : 2

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பணிபுரியும் திரு.எஸ்.கோவிந்தராஜ், தூய்மை பணியாளர் திண்டுக்கல் மாநகராட்சியில் தற்காலிக தினக்கூலி பணியாளராக பணி புரிந்த 20 ஆண்டுகளை நிரந்தர பணிக்காலமாக கருதி அதற்கான ஊதியம் வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் (W.P.(MD) No.3865/2022) இந்நகராட்சி சார்பாக திரு.லூர்து பவுல் மவுரியா வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை எதிர்கொண்டு தீர்புரை பெற்று தந்தமைக்கான கட்டணம் தொகை ரூ.15,000/- மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் , மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1691/2021/இ1)

**தீர்மான எண். 28**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்** : 3

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020-2021-ஆம் ஆண்டு பேருந்துநிலையத்தில் தட்டு மூலம் முருக்கு விற்பனை செய்யும் உரிமை குத்தகைதாரர் திரு.ஆர்.சக்திராமசாமி என்பவரால் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை மேல்முறையீட்டு வழக்கு W.A.(MD) No.220/2021 – இன் வழக்கில் இந்நகராட்சிக்கு எதிராக தீர்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, குத்தகை இனங்களின் வருவாயினை கருதி, இவ்வழக்கின் தீர்புரையினை எதிர்த்து உச்ச நீதிமன்றம், புதுதில்லியில் மேல்முறையீடு செய்ய இந்நகராட்சி சார்பாக திரு.லூர்து பவுல் மவுரியா வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.30,000/- மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகை இனங்களின் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி வழக்கின் தீர்புரையினை எதிர்த்து உச்ச நீதிமன்றம், புதுதில்லியில், மேல்முறையீடு தாக்கல் செய்யவும், அதற்கான கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1621/2021/இ1)

**தீர்மான எண். 29**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்** : 4

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2020-2021-ஆம் ஆண்டு பேருந்துநிலையத்தில் தட்டு மூலம் இஞ்சி மிட்டாய் விற்பனை செய்யும் உரிமை குத்தகைதாரர் திரு.மா.இன்பராஜா(லேட்), மகன் இ.அர்ஜீன் என்பவரால் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு W.P.(MD) No.219/2021 2021–இன் வழக்கில் இந்நகராட்சிக்கு எதிராக தீர்புரை வழங்கப்பட்டதை தொடர்ந்து, குத்தகை இனங்களின் வருவாயினை கருதி, இவ்வழக்கின் தீர்புரையினை எதிர்த்து உச்ச நீதிமன்றம், புதுதில்லியில் மேல்முறையீடு செய்ய இந்நகராட்சி சார்பாக திரு.லூர்து பவுல் மவுரியா வழக்கறிஞரிடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.30,000/- மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகை இனங்களின் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி வழக்கில் மேல்முறையீடு தாக்கல் செய்யவும், அதற்கான கட்டணத்தை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று தொகை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் , மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1691/2021/இ1)

**தீர்மான எண். 30**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்** : 5

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் செய்யப்படும் காசாளர் அறையில் தினசரி வசூல் செய்யப்படும் ரொக்கம் மற்றும் காசோலைகள் முதலீட்டு பத்திரங்கள் மற்றும் நில உரிமை பத்திரங்கள் ஆகியவை பாதுகாப்பாக வைக்க இந்நகராட்சியில் இரும்பு பெட்டகம் இல்லாததால் மேற்கண்டவற்றை பாதுகாப்பாக வைக்க இந்நகராட்சிக்கு சொந்தமாக இரண்டு சாவிகளுடன் கூடிய இரும்பு பெட்டகம் ஒன்று TANSI நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்துகெள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1045/2022/சி1)

**தீர்மான எண். 31**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தாமன வியாழக்கிழமை வாரச்சந்தை சுங்க வசூல் செய்யும் உரிமை, பேருந்துநிலையத்தில் தட்டு மூலம் முருக்கு மற்றும் இஞ்சி மிட்டாய் விற்பனை செய்யும் உரிமை, பேருந்துநிலையத்தினுள் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல், மற்றும் பேருந்துநிலையத்தில் உள்ள ஐ.யு.டி.பி/ஐ.டி.எஸ்.எம்.டி கடைகள் ஆகிய இனங்களுக்கு நாள்.06.04.2022-இல் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 22.03.2022-இல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அலுவலர், திண்டுக்கல் அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.83, நாள்.30.03.2022-இன்படி, தினகரன் தினசரி நாளிதழில் 31.03.2022-இல் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.21,000/- மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை தினகரன் தினசரி நாளிதம் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகை இனங்கள் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிப்பு வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகையினை, நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1691/2021/இ1)

**தீர்மான எண். 32**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் பணி 01.04.2022 முதல் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த இனத்திற்கு பல முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் இந்நகராட்சியில், இது போன்ற துறை வசூல் பணிக்கு போதுமான நிரந்தரப்பணியாளர்கள் இல்லாத நிலையில், பொதுசுகாதார பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி இனத்திற்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் கோர எவரும் முன்வராததால், நிரந்தரமாக துறை மூலமே வசூல் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்படி வசூல் பணியினை மேற்கொள்ள 3 ஒப்பந்தப்பணியாளர்களை ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ளவும் அதற்கான ஆண்டு செலவினம் ரூ.4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குத்தகை இனம் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி விடப்படும் காலம் வரை ஒப்பந்த பணியாளர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி, ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மான எண். 33</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 8</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுவில் இயங்கி வரும் பேட்டரி வாகனம் 10 எண்ணம் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுசுகாதரப் பணிகளில் தொய்வில்லாமல் நடைபெற வேண்டிய அவசர அவசியம் கருதி மேற்படி பழுது ஏற்பட்டுள்ள 10 எண்ணம் பேட்டரி வாகனங்களை பழுது நீக்கும் பணிகள் மேற்கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 லட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று,பழுது ஏற்பட்டுள்ள பேட்டரி வாகனங்களை பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மான எண். 34</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனங்கள் TN 57 AW4437, TN 94 Z6279, TN 94 Z6305 ஆகிய மூன்று வாகனங்களுக்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.15 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 35**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனங்கள் Tipper Lorryஎண். TN 57 R2362, TN 57 U7987, TN 57 AW2197 மற்றும் டிராக்டர் வாகனம் TN 57 V5268ஆகிய ஐந்து வாகனங்கள் பழுது நீக்கப் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.75 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 36**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் எண். TN57 R4390 அவ்வபோது பழுது ஏற்பட்டு வருவதால், குடிநீர் விநியோகம் சரிவர செய்ய இயலாத நிலையுள்ளது. எனவே, மேற்படி வாகனத்தை பழுது நீக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.75 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 37**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 2021-2022-ஆம் ஆண்டுக்கான கணக்குகள் கணினி மூலம் பதிவேடுகளை வைத்து வரவு செலவு கணக்கு தயார் செய்ய வேண்டியுள்ளது. ஆண்டு கணக்குகள் முடிப்பதற்கு, தனியார் பட்டயக் கணக்கர் மூலம் கணினியில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு வழங்குவதற்கு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2021-2022-ஆம் அண்டு கணக்குகள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 38**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் முதலானவைகள் திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு அச்சகம் மூலம் கொள்முதல் செய்யவும், தேவையான படிவங்கள் பிரிண்டிங் செய்யவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.80 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக பணிகளுக்கு தேவையான எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் படிவங்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 39**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் அலுவலக பணிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான பயணப்படி வழங்க உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 40**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினி, பிரிண்டர்கள், ஜெராக்ஸ் எடுக்கும் இயந்திரம் மற்றும் இதர கணினி தொடர்புடைய மென்பொருள்(Software), வன்பொருள்கள்(Hardware) கொள்முதல் செய்துகொள்ளவும் மற்றும் மராமத்து பணிகளும் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.9.80 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக அனைத்து பிரிவு பணிகளுக்கு தேவையான கணினி தொடர்புடைய பொருட்கள் கொள்முதல் மற்றும் மராமத்து பணி செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 41**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி சிறப்பு நிலை பேரூராட்சி நிலையிலிருந்து தரம் உயர்த்தப்பட்ட இரண்டாம் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி தரம் உயர்த்தப்பட்ட நிலையிலிருந்து அத்தியாவசிய பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்கப்படாமல் உள்ளது. குறிப்பாக இந்நகராட்சியின் அத்தியாவசிய பணியிடமான இரவு காவலர் பணியிடம் தோற்றுவிக்கப்படவில்லை. வருவாய் இனங்கள் பணமாகவும், காசோலைகளாகவும் பெறப்பட்டு இந்நகராட்சி கருவூலகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டு மறுநாள் வங்கியில் இருசால் செய்யப்படுகிறது. இரவு காவலர் பணியிடம் இல்லாததால் இந்நகராட்சி கருவூலகத்திற்கும், அலுவலகத்திற்கும் பாதுகாப்பற்ற சூழல் இருந்து வருகிறது.

மேலும், இந்நகராட்சி சின்னகுளம் நுண்உரக்குடில் மற்றும் ஆணையாளர் குடியிருப்பு பகுதிகளிலும் போதிய பாதுகாப்பு இல்லாத சூழல் இருந்து வருகிறது. எனவே இந்நகராட்சி அலுவலக ஆவணங்கள் பொருட்கள் மற்றும் கருவூலக பாதுகாப்பு அவசியம் கருதி, தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல கழகத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி மூன்று முன்னாள் படைவீரர்களை இந்நகராட்சி பாதுகாப்பு பணிக்கு தற்காலிகமாக விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளின்படியான வழிமுறைகள் மற்றும் நெறிமுறைகளுக்குட்பட்டு நியமனம் செய்து கொள்ளவும் ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தத்தை புதிப்பித்து நடைமுறையில் உள்ள விதிகளின்படி, ஊதிய தொகைகளை செலுத்தி வரவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலக ஆவணங்களின் பாதுகாப்பு அவசர அவசியம் கருதி, முன்னாள் படைவீரர்களை முன்னாள் படைவீரர் நல கழகத்தின் மூலம் தற்காலிகமாக நியமனம் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 42**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 17**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகதாரப் பிரிவில் இயங்கி வந்த காம்பாக்டர் வாகனம் (TN 57 AW 2529) -இன் பேட்டரி மிகவும் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேற்படி வாகனத்தின் பேட்டரி வாங்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. எனவே இந்நகராட்சி பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி காம்பாக்டர் வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கிக்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.7,500/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 43** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 18**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் GFC (Garbadge Free City) Star Reating பெறுவதற்கு நகராட்சி எல்லைகள், புதிய வார்டு எல்லைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை நகர்புற அடிப்படை கட்டமைப்புகளை Swachhatam MIS Portal-ல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் GFC (Garbadge Free City) Star Reating பெறுவதற்கு நகராட்சி எல்லைகள், புதிய வார்டு எல்லைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை நகர்புற அடிப்படை கட்டமைப்புகளை Swachhatam MIS Portal-ல் ஆதவா சிஸ்டம்ஸ் நிறுவனம் ஒட்டன்சத்திம் மூலம் பதிவேற்றம் செய்ய ஆகும் செவீனம் (வார்டு ஒன்றுக்கு 400 வீதம் 18 வார்டுகளுக்கு ரூ.7,200/- மற்றும் நகராட்சி எல்லைக்கு ரூ.2,000/- ) ரூ.9,200/- ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1454/2022/எச்1)

**தீர்மான எண். 44** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 19**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 6-வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் எரிவாயு தகன மேடை அருகில், (காவேரியம்மாபட்டி சாலை) உள்ள குளத்தில் மழைக்காலங்களில் வெள்ள நீர் அதிகளவில் வெளியேறும் நிலையில், அச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள தரைப்பாலத்தில் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையுள்ளது. மேற்படி சாலையில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு ஏதுவாக புதியதாக பாலம் அமைக்க நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1075/2022/இ1)

**தீர்மான எண். 45** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 20</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12-வது வார்டு சொசைட்டி காலனி பகுதியில் உள்ள பாலம் சேதமடைந்துள்ளதால், அப்பகுதி பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும், சிரமமாகவும் விபத்துக்கள் ஏற்படும் நிலையுள்ளதால் , மேற்படி பகுதியில் புதியதாக பாலம் அமைக்க நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.30 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் நலன் கருதி, புதியதாக பாலம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1076/2022/இ1)

**<u>தீர்மான எண். 46</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 21</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காப்பிலியபட்டி கிராமம் புல எண்.614/4சி முதல் 643/2பி முடிய உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான 18-ஏக்கர், 66-சென்ட் உள்ள நிலத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அரசின் சிறப்பு திட்டமான மூலதன மான்ய நிதி திட்டம் 2021-2022 மற்றும் 15வது மத்திய நிதி ஆணையம் மான்ய நிதி ஒதுக்கீடு 2021-2022-இன் கீழ் பொதுமக்களின் பொது நலன் கருதி, இந்நகராட்சி மூலம் அடர்வனக் காடு, வாகன நிறுத்த கொட்டகை, இயற்கை உரம் தயாரிக்க நுண் உரக்குடில், தார் சாலையுடன் கூடிய சுற்றுச்சுவர் மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைத்தல் முதலான பணிகள் நடைபெற்று வருகிறது. எனவே, மேற்கண்டுள்ள பணிகளின் பயன்பாட்டிற்காக, 8KV (7.5HP & 5HP மின்மோட்டார்) திறன் கொண்ட இரண்டு புதிய மின் இணைப்புகள் தற்போது பெற்றுக்கொள்ளவும், மேலும் உரக்கிடங்கு பயன்பாட்டிற்காக பெறப்படும் மின் இணைப்புகளுக்காக, வைப்புத் தொகை செலுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி காப்பிலியபட்டி கிராமத்தில் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக, இரண்டு புதிய மின் இணைப்புகள் பெற நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு தொகை செலுத்தியதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.602/2021/இ1)

**<u>தீர்மான எண். 47</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 22**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 31.12.2017 வரை பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை நகராட்சி நிர்வாகத்தின் UTIS மென்பொருளில் விடுதலின்றி பதிவேற்றம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், இந்நகராட்சியில் 1990ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை (பிறப்பு பதிவுகள் – 43,000 மற்றும் இறப்பு பதிவு – 3,000 மொத்தம் – 46,000) கணிணியில் பதிவேற்றம் செய்யவும், மேற்படி பணியினை விரைந்து முடிக்கப்பட வேண்டியுள்ளதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தனியார் நிறுவனம் மூலம் பதிவேற்றம் செய்யும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்தினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 46,000 பதிவுகளையும் கணிணியில் பதிவு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அறிக்கை செய்ய வேண்டியுள்ளதால், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.215/2022/எச்1)

**தீர்மான எண். 48**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 23**

ஒட்டன்சத்திரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரம் செய்யும் வியாபாரிகளில் அரசு அங்கீகாரம் பெற்ற சாலையோர வியாபாரிகளக்கு PMSAVNidhi திட்டத்தின் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு வங்கி கடன் உதவி வழங்கும் திட்டம் மற்றும் வியாபாரிகளுக்கு அவர்கள் செய்யும் பணிகளுக்கு ஏற்ப நடமாடும் கடைகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால், சாலையோர வியாபாரிகளை பதிவு செய்து சான்றிதழ் வழங்கவும் மற்றும் பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, சாலையோர வியாபாரிகளை பதிவு செய்து அடையாள அட்டை வழங்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.2.00 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**:

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 49**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 24**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM, நாள்.11.04.2022-இன்படி, இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2021-2022-இன் கீழ் (SBM) ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| மத்திய அரசு நிதி தொகை ரூ.இலட்சத்தில் | மாநில அரசு நிதி தொகை ரூ.இலட்சத்தில் | நகராட்சி பங்கு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 12.00 | 7.92 | 5.08 |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | 4-வது வார்டு தாராபுரம் சாலையில் உள்ள நுண்உரக்குடில் அருகில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல். | 25.00 |

மேற்காணும் திட்ட மான்ய நிதி ரூ.19.92 இலட்சம் மற்றும் இந்நகராட்சி பங்கு தொகை ரூ.5.08 இலட்சம் ஆக மொத்தம் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை ஏற்று மேற்காணும் பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியில் மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.19.92 இலட்சத்துடன் இந்நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ.5.08 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 50**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 25**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.27519-36/2021/P2, நாள்.30.03.2022-இன்படி, இந்நகராட்சிக்கு நமக்கு நாமே திட்டம் 2021-2022-இன் கீழ் (NNT) ரூ.32.50 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் தரைத்தளம் அமைத்தல் பணிக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

1. அரசு மான்யத் தொகை ரூ.21.20 இலட்சம்
2. 1/3 பொதுமக்களின் பங்களிப்பு தொகை ரூ.11.30 இலட்சம்

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தாராபுரம் சாலையில் உள்ள நகராட்சி நுண் உரக்குடில் (MCC) பகுதியில் பேவர் பிளாக் தரைத்தளம் அமைத்தல் பணி மேற்கொள்ளுதல். | 32.50 |

மேற்காணும் திட்ட மான்ய நிதி ரூ.21.20 இலட்சம் மற்றும் 1/3 பொதுமக்களின் பங்களிப்பு தொகை ரூ.11.30 இலட்சம் ஆக மொத்தம் ரூ.32.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினை ஏற்று மேற்காணும் பகுதியில் பேவர் பிளாக் தரைதளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டப்பணியில் மான்யமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.21.20 இலட்சத்துடன் பொதுமக்களின் பங்களிப்பு தொகையான ரூ.11.30 இலட்சம் மொத்தம் ரூ.32.50 இலட்சம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 51** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 26**

நமக்கு நாமே திட்டம் 2021-2022-இன் கீழ் ஒட்டன்சத்திரம் நகராட்சி சண்முகவேல்புரம் பகுதியில் சர்வே எண்.483/2, 484/4பி, 5பி1-இல் உள்ள பூங்காவிற்கு பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிக்கு தொகை ரூ.2.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.27519-26/2021/பி2, நாள்.19.03.2022-இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 12.04.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எம்.முத்துக்கண்ணன் | 4.95 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |
| 2 | திரு.ஹச்.முகமது ரஸ்மி | 9.26 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதமாக இருப்பதால் , மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு .எம்.முத்துக்கண்ணன், ரெட்டியபட்டி என்பவரின் மதிப்பீட்னைக்காட்டிலும் 4.95% கூடுதல் விலை விகிதத்தினை குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில், மேற்படியார் தனது 18.04.2022 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 4.95% உயர்வு சதவீதத்தில் மட்டுமே செய்து தர இயலும் என கடிதம் அளித்துள்ளதை , மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்காணும் திட்ட பணியினை 31.05.2022-க்குள் முழுவதுமாக முடித்து பணி முடிவறிக்கை நிதி பயனீட்டு சான்றிதழ் அளித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆய்வு கூட்ட அறிவுரையில் பணிக்கப்பட்டுள்ளதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோருவதால், ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மதிப்பீட்டு உயர்வு சதவீதம் நகர்மன்ற தலைவர் அதிகார வரம்பிற்குட்பட்டு வருவதாலும், தமிழ்நாடு நகராட்சிகள் பொறியியல் கையேடு விதிமுறை 2.7.2-இன்படியும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்..

**தீர்மான எண். 52**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 27**

வட்டாட்சியர், ஒட்டன்சத்திரம் அவர்களின் கடித ந.க.எண்.2251/2022/இ3, நாள்.18.04.2022-இல் ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் கிராமம், தும்மிச்சம்பட்டி புல எண்.189/46-இல் 0.00.71 ஹெக்டர் மொத்த பரப்பில் முத்துக்கருப்பணப்பிள்ளை மகன் விவேகானந்தன், விவேகானந்தன் மகன் ரமேஷ் மற்றும் விவேகானந்தன் மகன் ராமலிங்கம் ஆகியோர் இலவச வீட்டுமனைப் பட்டா கோரியதற்கு, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் ஆட்சேபனை ஏதுமில்லை என தீர்மனம் நிறைவேற்றி அதன் நகல் அனுப்ப கேட்டுக்கொண்டதன்படி, புல எண்.189/46 ஆனது கிராம கணக்கு பதிவேட்டின்படி, கொட்டம் எனும் வகைப்பாட்டில் உள்ளது என்பதால், மேற்படி இடத்தில் சட்ட விதிகளுக்குட்பட்டு பட்டா வழங்குவதற்கு நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்பதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1090/2022/இ1)

**தீர்மான எண். 53**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 28**

ஒட்டன்சத்திரம் நகராட்சியின் நகர் பகுதி முழுவதும் கழிவுநீர் ஓடைகள் தூர்வாரப்பட்டு மண் கழிவுகள் முற்புதர்கள் அகற்றிய செடிகள், காந்தி மார்க்கெட் பகுதியில் சேகாரமாகும் காய்கறி கழிவுகள் மற்றும் சாக்கடை கழிவுகள் போன்றவற்றை நகர் பகுதி முழுவதும் சேகாரம் செய்து இந்நகராட்சிக்குட்பட்ட திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலையின் இருபுறமும் கொட்டி குவித்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் போன்ற உயர்அதிகாரிகள் வந்து செல்லும் பிராதான சாலையாக இருக்கிறது.எனவே அங்கு கொட்டி குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பை மற்றும் கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்திட வேண்டியுள்ளதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் தற்போது மேற்கொண்டு வரும் வாடகை JCB இயத்திர நிறுவனமான ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.7.00 இலட்சத்தினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் போன்ற உயர்அதிகாரிகள் வந்து செல்லும் பிராதான சாலை என்பதால் இப்பணியினை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று கழிவுகளை அப்புறப்படுத்தும் பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண்.1100/2022/எச்1)

**தீர்மான எண். 54**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 29**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டிற்கான வாகனங்கள் கீழ்க்கண்டவாறு பயன்பாட்டில் உள்ளதால், மேற்படி வாகனங்களை இயக்க இந்நகராட்சியில் இரண்டு ஓட்டுநர் பணியிடத்தில் ஒரு ஓட்டுநர் பணியிடம் காலியாக உள்ளது. இந்நிலையில் மேற்படி வாகனங்களை இயக்க தூய்மை பணியாளர்களை பயன்படுத்தப்பட்டு வருவதால், வாகனங்கள் அவ்வபோது பழுது ஏற்பட்டு கூடுதல் செலவினம் ஏற்படும் நிலையுள்ளது. எனவே கீழ்க்காணும் வாகனங்களுக்கு தகுதிவாய்ந்த ஓட்டுநர்கள் நியமித்துக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.20.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகனங்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காம்பாக்டர் | 1 |
| 2 | டிப்பர் லாரி | 2 |
| 3 | டாடா ஏசி | 5 |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகன ஓட்டுநர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி, ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.55** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 30**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனங்கள் கீழ்க்கண்டவாறு பயன்பாட்டில் உள்ளதால், மேற்படி வாகனங்களை இயக்க, இந்நகராட்சியில் இரண்டு ஓட்டுநர் பணியிடத்தில் ஒரு ஓட்டுநர் பணியிடம் காலியாக உள்ளது. இந்நிலையில், மேற்படி வாகனங்களை இயக்க தூய்மை பணியாளர்களை பயன்படுத்தப்பட்டு வருவதால், வாகனங்கள் அவ்வபோது பழுது ஏற்பட்டு கூடுதல் செலவினம் ஏற்படும் நிலையுள்ளது. எனவே கீழ்க்காணும் வாகனங்களுக்கு தகுதி வாய்ந்த ஓட்டுநர்கள் நியமித்துக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | வாகனங்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகர்மன்ற தலைவர் ஈப்பு வாகனம் | 1 |
| 2 | குடிநீர் டேங்கர் வாகனம் | 1 |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகன ஓட்டுநர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி, ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.56** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 31**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காந்தி தினசரி சந்தையில் நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பறை தனியருக்கு பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி கழிப்பறையில் நச்சுத்தொட்டி கட்டப்படாமல் கழிவுநீர் வாய்க்காலில் நேரடியாக வெளியேற்றுவதை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி கழிப்பறையில், கழிவுநீர் தொட்டி அமைக்கவும் அக்கட்டிடத்தில் உள்ள மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.57** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 32</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 6-வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் மயானப் பகுதியில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள, நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 58</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 33</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் தெருமின்விளக்குகள் இல்லாத குடியிருப்பு அபிவிருத்தி பகுதிகள், சாலை விரிவாக்க பகுதிகள், பொதுமக்கள் அதிகளவில் கூடும் முக்கிய இடங்கள் மற்றும் புறவழிச்சாலை அமைக்கப்பட்டதன் காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சாலைகள் மற்றும் இணைப்பு சாலைகளில் புதியதாக தெரு மின் விளக்குகள் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி பகுதிகளில் புதியதாக தெருமின்விளக்கு அமைக்க தமிழ்நாடு மின்வாரியம் பகிர்மான கழகம் (நகர்பிரிவு), ஒட்டன்சத்திரம் மூலம் மதிப்பீடு பெற்று பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 59</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 34</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 6-வது வார்டு ஏ.பி.பி நகர் தெற்கு பகுதி முதல் 5-வது வார்டு வழியாக செல்லும் காவேரியம்மாபட்டி சாலை முடிய உள்ள மண் சாலையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக புதியதாக இணைப்புச்சாலை ஏற்படுத்த நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 60</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 35**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 3-வது வார்டு சங்குப்பிள்ளை புதூர் பகுதியில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2020-21-இன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக சமுதாய நலக்கூடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மேற்படி சமுதாய நலக்கூடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.10 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, சமுதாய நலக்கூடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 61**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 36**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான காப்பிலியபட்டி உரக்கிடங்கில் மியாவாக்கி முறையிலான அடர்வனக் காடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மேற்படி உரக்கிடங்கில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசின் சிறப்பு திட்ட செயலாக்க பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 62**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 37**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான காப்பிலியபட்டி உரக்கிடங்கில் அரசின் திட்டப்பணிகள் மூலம் நடைபெற்று வரும் பணிகள் மற்றும் மியாவாக்கி முறையிலான அடர்வனக் காடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மேற்படி உரக்கிடங்கில் மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல் மற்றும் பாதுகாத்தல் முதலான பணிகளுக்கு, மேற்படி உரக்கிடங்கில் காவலர் மற்றும் மரக்கன்றுகள் பராமரிப்பாளர் ஆகியோரை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியாளர்களுக்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரி, ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 63** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 38**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் உள்ள இரண்டு டம்பர் பிளேசர் வாகனங்களை நகராட்சி குடிநீர் தேவைக்காக குடிநீர் டேங்கர் வாகனம் மற்றும் கழிவுநீர் பயன்பாட்டிற்காக சல்லேஜ் டேங்கர் வாகனங்களாக மாற்றியமைக்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.20.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனங்கள் புதியதாக கொள்முதல் செய்ய ஆகும் கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் பொருட்டு, டம்பர் பிளேசர் வாகனத்தை, குடிநீர் மற்றும் பொதுசுகாதார பயன்பாட்டிற்காக டேங்கர் வாகனங்களாக மாற்றியமைக்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 64**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 39**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 11-வது வார்டு வேடசந்தூர் சாலை கிழக்கு பகுதியில் குடிநீர் விநியோகம் இல்லாத நிலையில், அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.25 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அபிவிருத்தி பகுதியாகவும் ஏற்கனவே இணைப்பு வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, பொதுமக்களின் குடிநீர் தேவையின் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 65**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 40**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு பேட்டரி வாகனங்கள் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள 04.05.2022-ஆம் நாளில் நகர்மன்ற தலைவர் முன்அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 11.05.2022-இல் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | வாகன விவரம் | EBOSS Electric Vehicle Manufactures, Tiruppur | Green Motors and Engineering Private limited | Ever Green Pro Ltd, Bavani |
|---|---|---|---|---|
| 1 | பேட்டரி வாகனங்கள் (10 எண்ணம்) | 349193.00 | 457890.00 | 429992.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பொதுசுகாதாரம் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள EBOSS Electric Vehicle Manufactures, Tiruppur நிறுவன விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

( கோப்பு எண் – 1093 /2022 /எச்1 )

**தீர்மான எண். 66**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 41**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனங்கள் TATA ACஎண். TN 57 AW4437, TN 94 Z6279, TN 94 Z6305ஆகிய மூன்று வாகனங்களுக்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள 22.04.2022-ஆம் நாளில் நகர்மன்ற தலைவர் முன்அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 28.04.2022-இல் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | வாகன விவரம் | ஸ்ரீ விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம். | குரு டீசல் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் | ஸ்ரீராம் டீசல் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | TATA AC TN 57 AW4437 | 40900.00 | 48000.00 | 55400.00 |
| 2 | TATA AC TN 94 Z6279 | 54150.00 | 56000.00 | 62950.00 |
| 3 | TATA AC TN 94 Z6305 | 54250.00 | 64100.00 | 70250.00 |

மேற்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பொதுசுகாதாரம் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம். ( கோப்பு எண்.1203 / 2022 /எச்1 )

**தீர்மான எண். 67**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 42**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனங்கள் Tipper Lorryஎண். TN 57 R2362, TN 57 U7987, TN 57 AW2197 மற்றும் டிராக்டர் வாகனம் TN 57 V5268 ஆகிய நான்கு வாகனங்களுக்கு பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள 22.04.2022-ஆம் நாளில் நகர்மன்ற தலைவர் முன்அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 28.04.2022-இல் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு.

| வ. எண் | வாகன விவரம் | ஸ்ரீ விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம். | குரு டீசல் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் | ஸ்ரீராம் டீசல் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | TN 57 R2362 (Tipper lorry) | 189400.00 | 237000.00 | 259100.00 |
| 2 | TN 57 U7987 (Tipper lorry) | 232500.00 | 251000.00 | 249600.00 |
| 3 | TN 57 AW2197 (Tipper lorry) | 188050.00 | 201800.00 | 230400.00 |
| 4 | TN 57 V5268 (Tractor) | 122000.00 | 129500.00 | 147700.00 |

மேற்படி விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பொதுசுகாதாரம் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

( கோப்பு எண்.1204 / 2022 /எச்1)

**தீர்மான எண். 68**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 43**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் எண். TN57 R4390 பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள 06.05.2022-ஆம் நாளில் நகர்மன்ற தலைவர் முன்அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, மேற்படி பணிக்காக 11.05.2022-இல் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ. எண் | வாகன விவரம் | ஸ்ரீ விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம். | குரு டீசல் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் | ஸ்ரீராம் டீசல் ஆட்டோ ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | TN57 R4390 (Water Tanker) | 172050.00 | 207000.00 | 230500.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பொதுசுகாதாரம் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ விநாயகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை எற்று பணி மேற்கொள்ள உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்

( கோப்பு எண்.1202 / 2022 / எச்1)

**தீர்மான எண். 69**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 44**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட 30.04.2022-ஆம் நாள் வருகை புரிந்ததை வரவேற்றும், இந்நகராட்சி சார்பில் அரசின் ஓரண்டாக நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளின் சாதனைகளை வாழ்த்தியும், 30.04.2022-ஆம் நாளிட்ட தினசரி நாளிதழில்களில் சாதனை விளம்பர வெளியீடு செய்யப்பட்டமைக்காக வரப்பெற்ற பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | தினகரன் தினசரி நாளிதழ் | 40,715/- |
| 2 | தமிழ் முரசு தினசரி மாலை நாளிதழ் | 37,800/- |
| 3 | தினமலர் தினசரி நாளிதழ் | 38,115/- |
| 4 | மாலை முரசு நாளிதழ் | 37,800/- |
| 5 | தினமணி தினசரி நாளிதழ் | 34,650/- |
| 6 | மாலை தமிழகம் நாளிதழ் | 14,700/- |
| 7 | தினத்தந்தி தினசரி நாளிதழ் | 46,778/- |
| 8 | மாலை மலர் நாளிதழ் | 28,586/- |

மேற்காணும் பட்டியலினை உரிய நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி விளம்பர வெளியீடு செய்தமைக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொளள் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 70**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 45**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலை மற்றும் தாராபுரம் மாநில நெடுஞ்சாலை பகுதிகளில் சாலையோர கடைகள் அதிகளவில் உள்ளதால், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி கடைகள் வியாபாரம் செய்வதற்கு ஏதவாக நகராட்சி மூலம் தென்னக இரயில்வேக்கு சொந்தமான காலியிடத்தினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்று, கடைகள் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி வருவாயினை கருதியும், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும், தென்னக இரயில்வேக்கு சொந்தமான பயன்பாடின்றி காலியாக உள்ள இடத்தினை நீண்டகால குத்தகைக்கு பெற மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 71**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 46**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் பழனி தேசிய நெடுஞ்சாலை, திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை, தாராபுரம் மாநில நெடுஞ்சாலை, வேடசந்தூர் மாநில நெடுஞ்சாலை மற்றும் புறவழிச்சாலை முதலான பகுதிகளில் இந்நகராட்சி எல்லைகளில் துருப்பிடிக்காத இரும்பால் செய்யப்பட்ட (Stainless Steel) பெயர் பலகை 3எம் ஹைவே ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு பொருத்திக்கொடுக்க 16.05.2022-ஆம் நாளில் கோரப்பட்டதில் விலைப்புள்ளிகள் வரப்பெற்றது கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விவரம் | கருடா ஸ்டிக்கர்ஸ், ஒட்டன்சத்திரம் (பலகை 1-க்கு) | ஆத்மா ஸ்டிக்கர்ஸ், பழனி (பலகை 1-க்கு) | மின்னல் ஆர்ட்ஸ், தாராபுரம் (பலகை 1-க்கு) |
|---|---|---|---|---|
| 1 | துருப்பிடிக்காத இரும்பால் செய்யப்பட்ட (Stainless Steel) பெயர் பலகை 3எம் ஹைவே ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு எல்லைகளில் பொருத்திக்கொடுத்தல். | 59800.00 | 61200.00 | 63250.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் கருடா ஸ்டிக்கர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவு, மேற்படி நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளி அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் மற்றும் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள கருடா ஸ்டிக்கர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 72**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 47**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் தள்ளு வண்டிகள்-25 எண்ணம், பேட்டரி வாகங்கள்-18 எண்ணம் மற்றும் தினசரி வீடு வீடாக திடக்கழிவு பெறுவதற்கு ஒவ்வொரு வாகனத்திற்கும் அழைப்பு மணி (பித்தளை) மற்றும் சக்கரம் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆகும் உத்தேச செவினத் தொகை ரூ.55,000/- மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பொதுசுகாதார நலன் மற்றும் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 73**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 48**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு அம்மா உணவகம் பயன்பாட்டிற்கு தினசரி நகராட்சி குடிநீர் டேங்கர் வாகனம் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது குடிநீர் டேங்கர் வாகனம் TN57 R4390 வாகனம் பழுதின் காரணமாக இயக்க இயலாமல் உள்ளது. தினசரி பயன்பாட்டிற்கு அம்மா உணவகத்திற்கு ஒரு லோடு வழங்கிட உத்தேசமாக ரூ.800/- ஆகும் என்பதால், வாகனம் பழுது நீக்கம் செய்து வரும் வரை உத்தேசமாக 20 தினங்களுக்கு ஆகும் உத்தேச செவினத் தொகை ரூ.16,000/- மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 74**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 49**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வட்டாட்சியர் அலுவலகம் வழியாக நாயக்கனூர் செல்லும் சாலையில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் பாலத்தில் கூடுதல் பணியாக தரைதளத்துடன் கூடிய தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்காக நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்படட் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 75**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 50**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா அவ்வபோது பழுது ஏற்படுவதாலும், குறைவான கேமரா பொருத்துப்பட்டுள்ளதன் காரணமாக பொருட்கள் பாதுகாப்பு கண்காணிக்க இயலாத நிலையுள்ளதாலும் கூடுதல் கேமராக்கள் ஆகும் உத்தேச செவினத் தொகை ரூ.2.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் மற்றும் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 76** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 51**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக பொதுபிரிவு ஆண்டு கணக்குகள் தயார் செய்யும் பணிகளுக்காகவும், அனைத்து பிரிவுகளுக்கும் உதவியாளர் பணிகளுக்காகவும் ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்த பணியாளர்கள் நியமனம் செய்ய ஆகும் உத்தேச செவினத் தொகை ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண் | பணி விவரம் | பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆண்டு கணக்குகள் (Accounts) | 2 |
| 2 | பணி உதவியாளர்கள் | 3 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 77**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 52**

ஒட்டன்சத்திரம் நகராட்சி வியாழக்கிழமை வாரச்சந்தையில் கூடும் ஆடு, கோழி மற்றும் தோல் சுங்க வசூல் செய்யும் உரிமை மூன்றாண்டுகளுக்கு (2021-2022 முதல் 2023-2024 முடிய) 11.01.2022-இல் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மூன்றாண்டுகளுக்கு குத்தகை கோரிய திரு.பி.சுரேஷ், திண்டுக்கல் குத்தகைதாரர் 2022-2023-ஆம் ஆண்டுக்கு குத்தகையினை புதுப்பிக்க தொகை செலத்தாமல், கொரோனா காரணமாக குத்தகை தொகை தள்ளுபடி செய்யவும், குத்தகை காலத்தை நீட்டிப்பு செய்யவும் கோரி நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P(MD)No.4225/2022-இன்படி, வழக்கு தொடர்ந்ததன் காரணமாக மேற்படி வாரச்சந்தைக்கு ஒப்படைப்பு காலம் முதல் மூன்றாண்டுகளுக்கு (2022-2023 முதல் 2024-2025 முடிய) 06.04.2022, 19.04.2022, 27.04.2022 மற்றும் 13.05.2022 பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பொதுஏலம் யாரும் கோராத நிலையில், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்கண்டவாறு,

*13.05.2022-ஆம் நாளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் :*

| வ. எண் | பொதுஏலத்தில் கலந்துகொண்ட (திருவாளர்கள்) | ஏலக் கேள்வி விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| | **ஒப்பந்தப்புள்ளிகள்** | | |
| 1 | எம்.ரவி | - | 40,51,000 |
| 2 | கே.செல்வக்குமார் | - | 41,25,600 |

மேற்காணும் இனத்திற்கு நான்கு அழைப்புகளில் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பொது ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில், 13.05.2022-ஆம் நாளில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மான எண். 78** அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 53**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1723/2022/பி1, நாள்.01.04.2022-இல் ஈப்பு வாகனம் கொள்முதல் செய்ய அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில், நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு ஈப்பு வாகனம் கொள்முதல் செய்ய தீர்மான எண்.8 நாள்.14.03.2022-இல் நகர்மன்ற ஒப்புதல் பெற்று, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்ட நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.1725/2022/எம்.3, நாள்.06.05.2022-இல் பொலிரோ ஈப்பு வாகனம் தற்போது வரை கொள்முதல் செய்யப்படாமல் இருப்பின் ஸ்கார்பியோ வாகனம் ரூ.16,82,000/- அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு வாங்கிக்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு பொலிரோ வாகனத்திற்கு பதிலாக ஸ்கார்பியோ வாகனம் கொள்முதல் செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.768/2022/இ1)

**தீர்மான எண். 79**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 54**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான 6-வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் பகுதியில் செயல்பட்டு வரும் எரிவாயு தகன மேடையில் எரியூட்டும் இயந்திரம் பழுதடைந்து இயக்க இயாலாத நிலையில் உள்ளதை தொடர்ந்து, மேற்படி தகன மேடையின் அவசியம் கருதி உடன் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 80**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 55**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான 6-வது வார்டு பழனிக்கவுண்டன் புதூர் பகுதியில் அமைந்துள்ள இயந்திர அறை உட்பட அனைத்து கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சுவர்கள் முதலானவைகள் சிதலமடைந்துள்ளதை மராமத்து பணிகள் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.75 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 81**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 56**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது பிரிவில் இயங்கி வரும் RICHO நகல் எடுக்கும் இயந்திரத்திற்கு AMC வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 04.05.2022-ஆம் நாளில் நகர்மன்ற தலைவர் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, RICHO நகல் எடுக்கும் இயந்திரத்தின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்காக 11.05.2022-இல் கோரப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விவரம் | JP Marketing, Madurai | DR Marketing, Madurai | Xerox Tech Service system, Madurai |
|---|---|---|---|---|
| 1 | Xerox Machine AMC Contract charges for 1 Year | 14160.00 | 17700.00 | 21240.00 |

மேற்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பொதுசுகாதாரம் பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள JP Marketing, Madurai நிறுவன விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.( கோப்பு எண். 82 /2014 /B1)

**தீர்மான எண். 82**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 57**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதார பயன்பாட்டிற்கு BOV பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் குறைவான எண்ணிக்கையில் உள்ளதால், பொதுசுகாதார பணிகள் தினசரி நகர்பகுதி முழுவதும் திடக்கழிவுகளை அகற்ற இயலாத நிலையுள்ளது. எனவே, இந்நகராட்சி 1 முதல் 18 வார்டுகள், திண்டுக்கல் பழனி மெயின் மற்றும் தாராபுரம் சாலை சுகாதார பணிகளை சுணக்கமின்றி மேற்கொள்ளும் பொருட்டு, BOV பேட்டரியில் இயங்கும் வாகனங்கள் கூடுதலாக 5 எண்ணம் கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.11.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி, மேற்படி வாகனம் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 83**

அனுமதிக்கப்பட்டது.

ஓம்/-க.திருமலைசாமி,
நகர்மன்ற தலைவர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

## ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டமானது 20.05.2022 (வெள்ளிக் கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

நாள்.19.05.2022

**பொருள் : 1**

அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022-இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கீழ்க்கண்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி / காலி மனை வரியினை பொதுச்சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.22 நாள்.11.04.2022-இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி : குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building)**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building)**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வத சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்

5. வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்

6. தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.

**காலிமனை வரி பொதுசீராய்வு :**

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்துவரியுடன் சேர்த்து காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

| காலிமனை வரி | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரி சீராய்வின் போது காலிமனை இடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A-குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ள தெருக்கள் பகுதி | 0.20 | 0.40 |
| B-முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | 0.15 | 0.30 |
| C-முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைக்கு இட்டு செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | 0.10 | 0.20 |

**சொத்துவரி பொது சீராய்வு :**

| குடியிருப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | கட்டிடத்தின் சதுர.அடி | | | |
| | | <=600 | 601-1200 | 1201-1800 | >=1801 |
| | | 1.25 | 1.5 | 1.75 | 2 |
| A | 0.70 | 0.88 | 1.05 | 1.23 | 1.40 |
| B | 0.60 | 0.75 | 0.90 | 1.05 | 1.20 |
| C | 0.50 | 0.63 | 0.75 | 0.88 | 1.00 |
| D | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |

| வணிகம் | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A | 2.10 | 4.20 |
| B | 1.80 | 3.60 |
| C | 1.50 | 3.00 |
| D | 0.00 | 0.00 |

| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 1.50 | 2.63 |
| B | 0.00 | 0.00 |
| C | 0.00 | 0.00 |
| D | 0.00 | 0.00 |

| தொழிற்சாலை | | |
|---|---|---|
| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வரிசீராய்வின் போது தொழிற்சாலை பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 0.00 | 0.00 |
| B | 0.00 | 0.00 |
| C | 0.00 | 0.00 |
| D | 0.00 | 0.00 |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொதுசீராய்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதனை பொதுமக்கள் அறியும் வகையில் திண்டுக்கல் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக 13.04.2022 மக்கள் குரல் நாளிதழ், 14.04.2022 தினகரன் ஆகிய நாளிதழ்கள் மற்றும் 13.04.2022 Afternoon ஆங்கில நாளிதழ்களின் செய்தி வெளியிட்டும், அலுவலக விளம்பரப் பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு **மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு, உயர்வு செய்யப்படும் காரணிகள் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு** ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சமர்ப்பிக்குமாறு நாளிதழ்கள் வாயிலாக வெளியிடப்பட்டன. அதன்படி 23 ஆட்சேபனை மனுக்கள் பெறப்பட்டன. மேற்படி ஆட்சேபனை மனுக்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான காரணங்கள் ஏதுமில்லை என்பதால் நிராகரிக்கப்பட்டன. எனவே, 11.04.2022-ம் தேதிய நகர்மன்ற கூட்ட தீர்மானம் எண்.22-இல் அங்கீகரிக்கப்பட்டவாறு, 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலியிட வரி பொது சீராய்வு மேற்கொள்ளவும், இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பினை உறுதி செய்தும், அதற்கான அறிவிக்கையை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.991/2022/அ1)

**<u>தீர்மான எண். 84</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 2</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி காப்பிலியபட்டியில் உள்ள இந்நகராட்சியின் உரக்கிடங்கில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் (FSTP) 2022-2023-இன் கீழ் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட கீழ்க்காணும் திட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காப்பிலியபட்டி உரக்கிடங்கில் 20 KLD கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி மேற்கொள்ளுதல் | 300.00 |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.300.00 இலட்சத்தினை நகராட்சியின் நிதி நிலையினை கருதி, முழு மானியமாக வழங்கி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி வழங்க கோரியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 85</u>** அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டுகள் மற்றும் நகர் பகுதிகளில் உள்ள 2451 தெருமின் விளக்குகளில், பழுது ஏற்பட்டுள்ள தெருமின் விளக்குகளை சரிசெய்ய தேவையான உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

3. மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 86**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பணிக்கு தேவையான பகிர்மானக் குழாய் மற்றும் பம்பிங் மெயின் குழாய்களுக்கு உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 87**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 5**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2022-2023-ஆம் ஆண்டுக்கு 1 முதல் 18 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் பழுது ஏற்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுவதால், பகிர்மான குழாய்களை சரிசெய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 88**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டுகளில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தப்படும் மினிபவர் பம்ப் 176 எண்ணம் (15 ஹச்.பி, 7.5 ஹச்.பி, 5ஹச்.பி மற்றும் 1.5ஹச்.பி) அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சியால் பழுது பணி மேற்கொள்ள ஆட்கள் இல்லாததால், மேற்படி மினி பவர் பம்ப் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்ய நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண். 89** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டுகளில் 2022-2023-ஆம் ஆண்டுக்கான சொத்துவரி நிலுவை தொகை ரூ.38.38 இலட்சம் மற்றும் குடிநீர் கட்டணம் (குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாட்டு கட்டிடங்களுக்கு வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புக்கான கட்டணம்) தொகை ரூ.39.09 இலட்சம் நிலுவையாக உள்ளது. மேற்படி நிலுவை தொகையினை வரவாக்கம் செய்ய கட்டிடங்களில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகளை துண்டிப்பு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாததால், வசூல் பணி மேற்கொள்ள இயலாத நிலையுள்ளது. எனவே, நிலுவையாக உள்ள சொத்துவரி மற்றும் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான கட்டணத்தை நிலுவையின்றி வசூல் செய்ய ஏதுவாக, JCB வாகனம் மூலம் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யவதற்கு, JCB வாகனம் வாடகைக்கு எடுத்துக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் வருவாயினை கருத்தில் கொண்டு, மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 90**

அனுமதிக்கப்பட்டது.

ஓம்/-க.திருமலைசாமி,
நகர்மன்ற தலைவர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி